மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ம் நாள் திங்கட்கிழமை

இ.ம.எண்.02/2023
உள்
அசல் வழக்கு எண்.57/2021

-------------

சுப்பம்மாள்
ராமர்
மாரிச்சாமி
ராமலட்சுமி
முருகலட்சுமி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

தங்கமாரிமுத்து ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு 06.01.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 01.02.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சங்கர்ராம் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், எதிர்வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனு 02.12.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

அசல் வழக்கில் வாதி தரப்பு 1வது சாட்சி விசாரிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அசல் வழக்கில் எங்கள் தரப்பில் எதிர்பாத்திய கோரிக்கையுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். அதில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தபசிலாக காட்டியுள்ளார்கள். மேற்படி தபசில் சொத்து விபரத்தில் அளவுகளை தவறாக குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தட்டச்சுப்பிழையால் ஏற்பட்டுவிட்டது. அசல் வழக்கில் வா.சா.1-ஐ குறுக்குவிசாரணை செய்வதற்காக வழக்கு கோப்புகைள படித்து பார்க்கும்போது மேற்படி தவறு மனுதாரர்கள் கவனத்திற்கு வந்துள்ளது. மேற்படி பிழையை சீர்திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்த வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரர்களுக்கு அசல் வழக்கில் இழப்பு ஏற்பட்டுவிடும். எனவே, எதிர்வழக்குரையில் சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த மனு மீது எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணைகள் இருக்கப்போவதில்லை. மனுவை அனுமதிக்காது போனால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-**

மனுதார்கள் மனு வீணானது. அது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை. தாவா வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் 1வது சாட்சியாக வாதியை முதல்விசாரணை செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி வாதி 1வது சாட்சியை குறுக்குவிசாரணை செய்வதற்கு என்று கடந்த 05.12.2022, 06.01.2023, 12.01.2023 என பல வாய்தா வாங்கி குறுக்குவிசாரணை செய்யாமல் காலம் கடந்தது தாவா சீர்திருத்த மனு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாவா மனு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த

26.04.2022ம் தேதியன்று எதிர்வழக்குரையுடன் கூடிய கவுண்டர்கிளைம் தாக்கல் செய்துள்ளார். மேற்படியார்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையுடன் கூடிய கவுண்டர்கிளைமின் சொத்து விபரத்தில் அளவுகள் குறிப்பிட்டு தாக்கல் செய்திருக்கிறார்கள். அதில் குறிப்பிட்டுள்ள அளவுகள் எந்த ஆவணங்களின் அடிப்படையில் கண்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்று விபரமும் கவுண்டர்கிளைமில் குறிப்பிடவில்லை. தற்போது தாவா எதிர்வழக்குரையுடன் கூடிய கவுண்டர் கிளைமின் சொத்து விபரத்தில் அளவுகள் குறிப்பிட்டு தாக்கல் செய்திருக்கிறார்கள். அதில் குறிப்பிட்டுள்ள அளவுகள் எந்த ஆவணங்களின் அடிப்படையில் கண்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரமும் கவுண்டர்கிளைமில் குறிப்பிடவில்லை. தற்போது தாவா எதிர்வழக்குரையுடன் கூடிய கவுண்டர் கிளைமின் சொத்து விபரத்தை சீர்திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா சீர்திருத்த மனுவுடன் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யாமல் சீர்திருத்தம் செய்யக் கோருவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மேலும், அபிடவிட்டில் தட்டச்சுப்பிழை என்று கூறியிருக்கிற காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை.

தாவா வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய வாய்தா இருக்கும்பட்சத்தில் சீர்திருத்தம் செய்ய இயலாது வழக்கு விசாரணை ஆரம்பிக்கும் முன்பு தாவா மனுவை தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் தாவா வழக்கில் வா.சா.1ஐ விசாரித்த பின்பு தாக்கல் செய்திருக்கம் கட்டளை 6 விதி 17 சிபிசி மனுவின்படி பாதிப்படைந்துள்ளது. எனவே தாவா மனு சட்டப்படி செல்லாது. மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் ஏற்கெனவே தாக்கல் செய்த கவுண்டர்கிளைமில் சொத்து விபரத்தில் காட்டியுள்ள அளவுகளை எந்த ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளார் என்று எந்தவித சங்கதிகளும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் விளக்கப்படாத போது மேற்கொண்டு அதில் தற்சமயம் சீர்திருத்தம் செய்யக்கோருவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. தாவா வழக்கில் மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் எதிர்வழக்குரையுடன் கூடிய கவுண்டர்கிளைமில் ஒவ்வொரு பக்கமும் சரிபார்ப்பு செய்தே கையெழுத்து இட்டிருக்கும்போது தற்சமயம் தட்டச்சு

பிழையினால் அளவுகள் மாறுபாடு ஏற்பட்டுவிட்டது என்று கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. தட்டச்சு பிழையினால் மொத்த அளவுகளே மாறுபாடு ஏற்படாது. எனவே, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சொல்லும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எனவே, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்திருக்கும் மனுவை எதிர்மனுதாரர்/வாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

## 7). தீர்வு:-

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்களால் எதிர்வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனு 02.12.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு தங்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். எதிர்மனுதாரர்கள் சொல்வதைப் போல் எந்த ஆவணத்தின் அடிப்பைடயில் சீர்திருத்தம் கோரப்பட்டுள்ளது என்பதற்காக மனுதாரர் தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாவிட்டாலும் கூட மேற்படி சீர்திருத்தம் சரியானதா? இல்லையா? என்பதை வழக்கு விசாரணையின்போது தான் முடிவு செய்யமுடியும்.

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு எதிர்வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனு 02.12.2022ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள் :- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.